


## கர்த்தருக்கு காத்திருக்கும் ஜெபத்தின் பாக்கியம்!

ஒரு பரிசேயனின் ஜெபம், தன் நீதியை நம்பி 'நின்று' ஜெபித்த ஜெபமாயிருந்தபடியால், அவன் ஜெபம் அவனுக்கே திரும்பி வந்தது! (லூக்கா.18:12). அல்லது, அந்த ஜெபம் 'கூரைக்கு கூட' செல்லவில்லை! ஏனெனில், அவன் தேவனை காணும்படி.... தன் நிலைமையை, அவர் சமூகத்தில் அறியும்படி, அவருக்கு காத்திருக்கவில்லை! 'தேவனே!' என உடனே ஜெபிக்கத் தொடங்கிவிட்டான்!

ஆனால் ஆயக்காரனோ, அவன் எங்கோ தூரத்திலிருந்து ஜெபித்தாலும், அவனது கண்கள் வானத்தையும் தன் பரலோக தேவனையும் காணும் வரை காத்திருந்தபடியால், அவர் சமூகம் அவனுக்கு இறங்கி வந்தது! அந்த வெளிச்சத்தில், தன் இருதயத்தில் மறைந்திருக்கும் பாவங்களைக் கண்டான்! ஆகையால்தான், தன் இருதயத்தை அல்லது தன் மார்பை வருந்தி அடித்துக்கொண்டு "இருதயத்திலுள்ள பாவங்களைப்" போக்கி, பாவியாகிய தனக்கு இரங்கி பரிசுத்தம் தரும்படி கெஞ்சி நின்றான்! அவனது ஜெபமே கேட்கப்பட்டது என்றும், தன் ஜெபம் முடித்து வீடுதிரும்பும் போது மிகுந்த மகிழ்ச்சியுடன், தன் தேவனால் நீதிமானாக்கப்பட்டு சென்றான் என்றும் இயேசு கூறினார்! ஆம், இதுவே எந்த பரிசுத்தவானுக்கும் 'தினசரி' தங்கள் ஜெபத்தில் சம்பவிக்கும் அற்புதமாய் இருக்கிறது! (லூக்கா.18:13,14).

*-tr*

பெட்டகம் 19 அக்டோபர் 2017 பரல்கள் 10



## ‘காலங்கள் வீணாகாமல்’ தேவனுடைய நோக்கம் நிறைவேற்றக்கடவோம்!

நம் ஜீவியத்திலும், ஊழியத்திலும் தேவன் நம்மீது வைத்த நோக்கம் நிறைவேறுவதற்கு “நம் காலங்கள் வீணாவது” ஓர் பெரும் தடையாகும்! பிதா, இயேசுவை இந்த பூமிக்கு அனுப்பிய நோக்கமும், அவரது சித்தமும் இயேசுவின் ஜீவியத்திலும், ஊழியத்திலும் ஓர் குறைந்த 33½ ஆண்டுகளில் நிறைவேறியது, நம் யாவருக்கும் ஓர் பெரிய சவால்!

சங்கீதம்.117:4,5 “நாம் தேவ சித்தத்தில் தாபரிக்காமல் அல்லது கிருபையில் நிலைத்திராமல்” வனாந்திர ஜீவியத்தில் (சுய சித்தத்தில்) பிரவேசிப்பதே காலங்கள் வீணாகும் அபாயம் என எச்சரிக்கிறது. அந்த **வனாந்திரத்தில் ‘வழி காணாமல் திரியும்’ அவலமே** அதற்கு காரணம் என 40-ம் வசனம் சுட்டிக்காட்டுகிறது! ஆனால், **தேவனுடைய கிருபையோ என்றுமுள்ளது** என 1-ம் வசனம் கெம்பீரிக்கிறது. இயேசு அந்த கிருபையில் நிலைத்திருந்து, கிருபையின் மேல் கிருபை பெற்றவராய், பிதாவின் நோக்கத்தை கொல்கொதா கொடுமுடியில் ஜெயமாய் நிறைவேற்றி முடித்தார்!

நாமோ, கிருபையில் நிலைத்திராமல் மீண்டும் மீண்டும், வீழ்ந்து “கர்த்தரை நோக்கி கூப்பிட்டு” என இந்த அதிகாரத்தில் 4-முறை வாசிக்கிறோம் (வசனம்.6,13,19,28). இவ்வாறு கூப்பிடும் ஒவ்வொரு வீழ்ச்சியிலும், கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார் என அந்த ஒவ்வொரு வசனங்களில் நாம் வாசித்தாலும், வழி தவறிய வனாந்திர ஜீவியம் வீணல்லவா? ஆகவேதான் நாம், கர்த்தருடைய கிருபையோ என்றுமுள்ளது என அறிந்து, நாமும் கிருபையில் நிலைத்திருந்து தேவனுடைய நோக்கத்தை நம் ஜீவியத்திலும் ஊழியத்திலும் ‘காலங்கள் வீணாகாமல்’ நிறைவேற்றி முடித்திட 117-ம் சங்கீதம் கடைசி 43-ம் வசனம் நம்மை அழைக்கிறது! உணர்வடைந்த இவர்களையே ‘ஞானவான்கள்!’ எனவும் இந்த வசனம் போற்றி மகிழ்கின்றது. ஆமென்!

*-Ed*


**பரலோக பொக்கிஷங்கள்**

வருடசந்தா **ரூ.120.00** ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell: 98430 49935 Ph: 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## வேதத்தில் இப்படி உண்டோ? என ஒப்பிட்டு வஞ்சனைக்கு தப்புங்கள்!

இன்றைய கிறிஸ்தவம், வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட கிறிஸ்தவத்திற்கு ஒப்பானதாய் இல்லை! பாய்ந்து வரும் ஒரு தூய்மையான நதி..... அது, இணைய போகும் நதியின் நிலை, ஜனங்களால் குப்பையும் கூழமும் வீசி எறியப்பட்ட மாசுப்படிந்த நதியாய் இருந்தால் எவ்வளவு அருவருப்போ, அதுவே இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை! இயேசு மூலமாகவும் அப்போஸ்தலர்கள் மூலமாகவும் போதிக்கப்பட்ட தூய்மையான சத்தியங்களோடு ஏராளமான பாரம்பரியங்களும் 'தான்தோன்றி உபதேசங்களும்' கலப்படமாகி விட்டன. இன்றைய கிறிஸ்தவ போதக சந்தையில் 'அதிகமான விலையில்' போலியான வைரகற்கள் விற்கப்படுகின்றன!

இவர்களின் நடுவில், தேவனால் அழைக்கப்பட்டு **'மீதியாய் நிலைநிற்கும் உத்தம சபையோ'** அசல் வைர கற்களை 'இலவசமாய்' தருகிறார்கள்! அந்த வைரம் விலை மதிப்பிட முடியாததாய் இருந்தாலும், இந்த சபையினரோ அவைகளை இலவசமாகவே தருகிறார்கள். ஆனால், மீண்டும் துரதிருஷ்டமாய், இன்று வாழும் கிறிஸ்தவ ஜனங்கள் மெய்யான வைரகற்களின் மதிப்பை உணராத படியால்.... இந்த வைரகற்களை வாங்க முன் வரவில்லை! ஆகிலும் 'பளபளப்பாய் தோன்றும் போலி வைரகற்களை வாங்குவதற்கு' வரிசையில் நிற்கிறார்கள். அசல் வைர கற்களை கொடுக்க முயற்சிக்கும் சபையாய் இருக்கும் 'வைர மாளிகை' ஜனங்களால் தூஷிக்கப்பட்டு, உத்தம மூப்பர்களாய் முன் நிற்கும் 'வைரமாளிகை பொறுப்பாளர்கள்' அந்தந்த நகரத்திலுள்ள, போலி வைர கற்களை அதிக விலையில் விற்பனை செய்யும் ஊழியர்களால் கொலையும் செய்யப் படுகிறார்கள்!

இதுபோன்ற காலத்தில் வாழும் நாம் தூய்மையான நதியின் நீரை பருக வேண்டுமென்றால், அது புறப்பட்டு வரும் ஊற்றுக்கண்ணிற்கு செல்ல வேண்டியதே அவசியமாயிருக்கிறது.

**இக்காலத்தில், எந்த செய்தியையும், எந்த உபதேசத்தையும், ஊற்றுக்கண்ணாய் இருக்கும் வேதாகமத்தோடு சோதித்துப் பார்த்தே ஏற்றுக்கொள்ள வேண்டும்! இல்லையென்றால், நாம் நிச்சயமாய் வஞ்சிக்கப்படுவோம்!**

ஏனென்றால், போலி வைரகற்கள் விலை மதிப்பில்லாத அசல் கற்களைப் போலவே தோற்றத்திற்கு காட்சி அளிக்கின்றன. உத்தமமான ஊழியர்களாய் தேவனுக்கு நிலைநின்று, இன்றைய போலி-வஞ்சகத்தை வெளியரங்கமாக்கி சத்தியத்தை போதிக்கும் தேவ ஊழியர்கள், போலியை விரும்பும் கள்ளப் போதகர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள். ஆகிலும், தேவனுக்காக நிற்கும் உத்தம தாசர்களை, இன்று வரை யாரும் ஜெயித்திட முடிந்ததில்லை.

ஆகிலும், வருத்தமான உண்மை என்னவென்றால், திரள் ஜனங்கள், போலி வைரகற்களை நாடியே கூட்டம் கூட்டமாய் செல்கிறார்கள். அது ஏனென்றால் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமானது.... அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் மாத்திரம், என்பதே ஆகும்! இவ்வித காலத்தில், மெய்யான சபைகளை தேவன் அழைத்து, அசல் வைரங்களை மாத்திரமே வழங்கும் கனத்தை கொடுத்துள்ளார்! ஆகிலும், அவைகளை முற்றிலும் இலவசமாய் தரும்படி செய்திருக்கிறார். இதுபோன்ற சபையினர் “பூரண சத்தியம்” என்ற நிலையில், தங்கள் போதகங்களில் யாதொரு சமரசமோ அல்லது ஒத்த வேஷமோ அனுமதித்து விடக்கூடாது!

**யாதொரு சமரசத்திற்கும் உடன்படாத உத்தம பெரோயா சபையினர்:**

பெரோயா பட்டணத்தார், “தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாய் இருந்தார்கள்” என வேதம் சாட்சி கூறுவதைப் பாருங்கள் (அப்.17:11). அது ஏனென்றால், இவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலின் செய்திகளை மிகுந்த ஆர்வமுடன் கேட்டு பெற்றுக்கொண்டார்கள்!

**ஆகிலும், அந்த செய்திகளை ‘காரியங்கள் இப்படி இருக்கிறதா?’ என்று பவுலின் வார்த்தைகளை வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தார்கள்!**

இதனிமித்தமே, தெசலோனிக்கேய சபையினரைப் பார்க்கிலும் **நற்குணசாலிகள்** என ஆவியானவரால் மெச்சிக்கொள்ளப்பட்டார்கள்! அவ்வாறு வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது, அந்நாட்களில் மிகவும் ஒரு கஷ்டமான செயலாகும். பழைய ஏற்பாட்டு வேதாகமம், தோல் சுருள்களில் எழுதப்பட்டதாகும். ஓய்வுநாளில் மாத்திரமே, ஆலயங்களில் இந்த தோல் சுருள் வேதாகமம் வாசிக்கப் பட்டது. ஆகவே பெரோயாவினர், ஒவ்வொரு வாரமும் ஆலயத்திற்குச் சென்று, பவுலின் போதகங்கள் வேதவாக்கியங்களுக்கு ஒத்து இருக்கிறதா? என்பதை அறிந்து ‘அதை’ அடுத்த ஓய்வுநாளில் பவுலிடம் தெரிவித்தார்கள்.

இக்காலத்தில், இந்த பெரோயா சபையினர் கற்றுத்தந்த பாடத்தையே நாம் அனைவரும் கைக்கொள்ள வேண்டும். வேத வாக்கியங்களில் ஆதாரமில்லாத எந்த போதகங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. உதாரணமாக "எப்போதும் சந்தோஷமாய் இருங்கள்" என்ற இந்த வாக்கியத்தை பிலிப்பியர்.4:4 -ல் வாசித்து அதை 1தெசலோனிக்கேயர்.5:16-ம் வசனத்தோடு ஒப்பிட்டு ஏற்றுக் கொள்கிறோம். "கோபமடையாதீர்கள்" எனக்கூறும் கட்டளையை எபேசியர்.4:26,31 வசனங்களில் வாசித்து அதை நாம் கொலோசெயர்.3:8, மத்தேயு.5:22 வசனங்களோடு ஒப்பிட்டு ஏற்றுக்கொள்கிறோம். இவ்வாறு வேத வசனத்தோடு, மற்றொரு வேத வசனத்தை நாம் ஒப்பிட்டு ஊர்ஜிதப்படுத்துவது போலவே, **எந்த ஒரு பிரசங்கத்தையும், போதனைகளையும் நாம் வேத வசனத்தோடு ஒப்பிட்டு** ஊர்ஜிதம் செய்வது மிக அவசியமாகும்!

புதிய ஏற்பாட்டு போதகங்கள், ஒரு சதுர பேப்பரில் இயேசுவின் முகம் குறுக்கும் நெடுக்குமாய் கத்தரிக்கப்பட்ட பல துண்டு பேப்பர்களைப் போன்றதே ஆகும்.

**இந்த ஒவ்வொரு துண்டுகளும் 'ஒரு உபதேசம்' ஆகும்! தேவனுடைய முழு ஆலோசனைகளும் சேர்ந்து இணைவதே இந்த துண்டுகளின் மொத்த வடிவமாகும். அதுவே இயேசுவின் மகிமையான முகம்!**

ஆனால் இன்றைய பெரும்பாலான சபைகள், சில துண்டு பேப்பர்களை மாத்திரமே சுவிசேஷமாய் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் இயேசுவின் முகத்தின் மகிமையை கொண்டு வரும் முக்கிய துண்டுகள் இல்லாதபடியால், அவரது முழு முக அழகின் தோற்றம் காணப்படாமல் இருக்கிறது. அநேக சபைகளில் "தேவன் அன்பாகவே இருக்கிறார்! தசமபாகம் செலுத்துங்கள்! ஏழைகளுக்கு உதவுங்கள்! வேத வாக்கியங்களைப் படியுங்கள்!".... போன்ற முக்கியமான துண்டுகளை வைத்திருப்பதாக கூறுகிறார்கள். இதுபோன்று நீங்கள் வைத்திருக்கும் துண்டுத் தாள்களை, மற்ற மார்க்கத்தார்களும் போதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இயேசு புதிய உடன்படிக்கைக்கு வலியுறுத்திய முக்கிய போதகங்களான "பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது! பெருமையை முற்றிலும் அகற்றுங்கள்! தாழ்மையில் வேர் கொண்டு நிலைத்திருங்கள்! ஒன்றிற்கும் கவலைப்படாதிருங்கள்!" ஆகிய இந்த முக்கிய உபதேசங்கள் இன்றைய கிறிஸ்தவத்தில் மறைந்திருக்கின்றன!

பவுல் இந்த பெரோயா பட்டணத்தாருக்கு ஒரு நிருபம்கூட எழுதவில்லை. ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் வஞ்சிக்கப்

*படவில்லை! அதற்கு காரணம், எந்த பிரசங்கியின் வார்த்தைகளையும் வேத வாக்கியத்தோடு அவர்கள் ஒப்பிட்டு பார்த்ததால், அந்த வேத வாக்கிய ஒப்பீட்டு கோர்வைகள் 'இயேசுவின் முழு முகத்தின் அழகையும்' அவர்களுக்கு காட்டியது.*

**இந்த பெரோயா மக்களைப் போலவே நாமும் 'நற்குணசாலிகளாய் மாறினால்' நாம் மெய்யாகவே கிறிஸ்துவுக்குள் ஐசுவரியவான்களாய் மாறி இருப்போம்.**

*அப்படி இருந்தால், பரிசுத்தாவியானவர் நம்மைப் பார்த்து "இந்த சகோதரன், கிறிஸ்துவுக்குள் நற்குணசாலியான சகோதரன்!" என சாட்சி கொடுப்பார். ஆம், ஒரு மாபெரும்* **அப்போஸ்தலனாகிய பவுலின் செய்திகளைக் கூட** *"வேத வாக்கியங்கள் இப்படி இருக்கிறதோ?" என ஒப்பிட்டு பார்ப்பவர்கள் மாத்திரமே இன்றைய கொடிய நாட்களில் வஞ்சிக்கப்படமாட்டார்கள். இவ்வாறு செய்யாத யாராயிருந்தாலும், அவர்கள் நிச்சயமாய் வஞ்சிக்கப்பட்டுப் போவார்கள்!*

*– சகரியா பூணன்*

---

## கசந்த வாழ்வை இனிப்பாய் மாற்றும் தேவன்!

*என் நண்பர்களோடு நான் பேசுவதை 'ஒட்டு கேட்பதற்கு' என் சொந்த மகனையே எனக்கு துரோகமாய் அனுப்பிய செயல், என்னை பாதித்ததைவிட என் மகனின் நற்குணத்தை அதிகம் பாதித்துவிட்டது. என் மாமியார் என்மீது கொண்டிருந்த வெறுப்பு, அவனுடைய நெஞ்சிலும் வேர்விடத் தொடங்கியது. இந்த நிலையில், என் அப்பாவின் அரண்மனை வீட்டிற்குச் சென்ற எனது மகன், என் அப்பாவிடம், என்னைக் குறித்தே தீமையான வார்த்தைகளை மிக சாதாரணமாய் பேசி இருந்தான். என் தந்தையோ, அதைக் கேட்டு மிகவும் மனம் சஞ்சலமடைந்தார்! இதைப் போன்று என் மாமியாரிடம் அவன் பேசும்போது 'அவர்கள் சிரித்து மகிழ்ந்தது போல' என் தந்தை இல்லாததைக் கண்டு, அவன் சிறிது உணர்வடைந்தான்.*

*சொந்த மகனே, தன் தாய்க்கு விரோதமாய் பேசிய கொடுஞ்சொற்கள், என் அப்பாவின் கண்களில் கண்ணீரை வர வைத்துவிட்டது! தாத்தா அழுவதைக் கண்டு, என் மகன் திடுக்கிட்டான். அவனை அழைத்துக் கொண்டு, என் தந்தை என் மாமியார் வீட்டிற்கு வந்தார். என் மகனின் போக்கிற்கு, என் மாமியார்தான் காரணம் என்பது, என் தந்தைக்குத் தெரியாது! அப்பொழுது நான் வீட்டில் இல்லாதபடியால், என் மாமியாரிடம், என் மகனின் செயலை திருத்தும்படி கூறிச் சென்று விட்டார். என் மாமியாரோ, அது குறித்து, என் மகனிடம் ஒரு வார்த்தைக் கூட பேசி*

திருத்தவில்லை. இவை அனைத்தையும் நான் சில நாட்களுக்குப் பிறகு கேட்டு வருந்தினேன். இவ்வித நிலையிலும் "தேவனுடைய ஆறுதல்" எனக்குப் போதுமானதாய் இருந்தது.

**எந்தப் பாடுகளும் கொஞ்ச காலம்தான் என்பதையும்.... ஆனால், அந்த கொஞ்ச கால பாடுகளில் பெற்றிடும் ஆறுதலோ நித்திய மகிழ்ச்சியானது எனவும், தேவனிடம் பாடம் கற்றுக்கொண்டேன் (2கொரிந்தியர்.4:17).**

பிற்காலத்தில், இதே மகன் ஆழமாய் மனந்திரும்பி தேவனிடம் கிட்டிச் சேருவான்! என்ற உறுதியையும் தேவனிடமிருந்து நான் பெற்றுக் கொண்டேன்.

என் கணவருக்கு சுகவீனமான காலத்தில், அவரை விசாரிப்பது மிகக் கடினமான பணியாய் இருந்தது. அவரது ஒவ்வொரு கூப்பிடுதலுக்கும் நான் உடனே வந்து நிற்க வேண்டும். இல்லையென்றால் என்மீது அவ்வளவு கோபமடைவார்! அவர் கூப்பிடுகிற நேரத்தில் எல்லாம் நான் விரைந்து வந்து நின்றாலும், அதைக்குறித்து மகிழ்ச்சி அடையமாட்டார். நான் அவருக்குச் செய்த ஒவ்வொரு பணிவிடையிலும் "குறைகூறி" வெறுப்பையும் துவேசத்தையும் என்மீது கொட்டினார். இதே நிலையில், நான் பல நாட்கள் வாழ வேண்டியிருந்தபடியால், அவர் என்னை கூப்பிட்டு, அவருக்குப் பணிவிடைச் செய்ய வரும் நேரங்களில், என் உடம்பில் நடுக்கம் ஏற்படுவதைக் கண்டு வருந்தினேன்.

நான் எவ்வளவு முயன்றும், அவர் மெச்சிக்கொண்டு ஏற்றதாக எதுவுமே இல்லை. சுமார் ஒரு நாளில் நான்கு முறை அவருக்கு 'சூப்' தரவேண்டும். ஆனால் அவருக்கோ சூப் சிறிது கூட பிடிக்காது. என் மாமியாரிடம் எடுத்துக் கூறி, சூப்பை நீங்கள் அவருக்கு கொடுங்கள் என வருந்தி கேட்டு கொண்டேன். அவர்களோ அதற்கு மறுத்து விட்டார்கள். எனக்கோ, என் கணவர் சூப் அருந்தி சரீர பெலனடைய வேண்டும் என்ற உண்மையான விருப்பம் இருந்தபடியால், அவர் என் மீது எவ்வளவு கோபப்பட்டாலும், அவரிடத்தில் "ஒரு நாளில் நீங்கள் எத்தனை முறை என்னை உதாசீனம் செய்தாலும், உங்கள் சரீர பெலத்திற்கு தேவையான சூப் கொண்டு வருவது என் மேல் விழுந்த கடமை" எனக்கூறினேன். சில சமயங்களில் அதை ஏற்றுக் கொள்வார். அநேக சமயங்களில் மறுத்துவிடுவார்.

அதே சமயம், அவருக்கு மகிழ்ச்சியான உணவை நான் கொண்டு சென்ற சமயங்களில் எல்லாம், அதை என் கரத்திலிருந்து என் மாமியார் பறித்து, அதை தன் மகனுக்கு எடுத்துச் செல்வார். இவ்விதமாய், தன்

*தாயார் கொண்டு வருவதெல்லாம் மகிழ்ச்சி நிறைந்த உணவாகவும், நான் கொண்டு செல்வதெல்லாம் மகிழ்ச்சியற்ற உணவாகவும் இருப்பதாக, அவர் உள்ளத்தில் தவறான எண்ணம் பதிந்துவிட்டது. இதுபோன்ற துரோக நேரத்திலும், என் மாமியார் என்னை ஜாடையாய் பார்த்து வெற்றி புன்முறுவலுடன் போவார்கள். தன் தாயாரிடம் சிரித்து சிரித்து பேசி, அவர்கள் கொண்டு வந்த உணவை ருசித்து புசித்து, மிகுந்த நன்றியை தன் தாயாருக்கு என் கணவர் கூறுவார். நானோ மருந்தும் மாத்திரையும், அவர் வெறுக்கும் சூப்பும் அவரிடம் கொண்டு செல்லவே என் மாமியாரால் தள்ளப்பட்டேன்.*

**தன் தாயிடம் சிரித்து பேசும் அவர், என்னிடம் வெறுப்பும் கோபமும் ஆத்திரமும் கொண்டு பேசுவார்! என்னுடைய பணிவு, அன்பான உபசரிப்பு, மாசு படியாத என் பரிசுத்தம் ஆகிய யாதொன்றும் என் கணவருடைய உள்ளத்திற்கு மகிழ்ச்சியோ, பரிவோ அல்லது பாசமோ..... ஏன், என்மீது இரக்கத்தைக் கூட கொண்டுவர முடியவில்லை!**

*அன்று மாலை நேரத்தில் ஓர் நாள், நான் ஆண்டவரின் பாதத்தில் வீழ்ந்தேன். "ஓ, என் தேவனே! இந்த பூமியின் ஒரே வாழ்க்கையை நான் உமக்காக வாழாதிருந்தால், என் உள்ளம் கசப்பினால் நிறைந்து, துன்ப வெள்ளத்தில் மூழ்கி இந்நேரம் மாய்ந்திருப்பேன்!* **நீரோ, என் இதயத்தை, இந்த உலகம் கண்டறியாத "இனிப்பாக" மாற்றிய உம் தயவிற்கு நன்றி....** *கசப்பும் வெறுப்பும் நிறைந்த என் வாழ்வின் பாதையில், என்னை தயவாய் ஏற்று ஆறுதல் செய்யும் உம் சமூகத்திற்கு நன்றி!" என என்னையே அவர் பாதம் அன்புடன் சமர்ப்பித்தேன்!*

*– மேடம் குயான்*

---

## விசுவாசத்திற்கு கை கொடுக்கும் ஆண்டவர்!

*விக்கிள்ஸ்வொர்த் தன்னுடைய 'பிளம்பிங்' தொழிலில் மிகவும் உண்மையுள்ளவராயிருந்தார். ஆகிலும், அவரது வாடிக்கையாளர்கள் 'கூலிப் பணத்தை' அவருக்குத் தந்திட தாமதம் செய்தார்கள். இதைக் குறிப்பிட்டு அவர் கூறும்போது "நான் தேவையோடு வந்து, அவர் முன் நிற்பது, தேவனுடைய திட்டத்தில் ஓர் முக்கியமான பங்கு!" என அடிக்கடி கூறுவது வழக்கம். ஒரு தேவையின் நேரத்தில், தேவனே கதவை திறந்து, என் தேவையை பூர்த்தி செய்வது.... என் விசுவாசத்தை அதிகமாய் ஸ்திரப்படுத்தியது! என்றே அவர் கூறி மகிழ்ந்தார். அவர் மிகவும் மதித்த தேவ ஊழியர் வில்லியம் பூத் கூறும் வாசகத்தையும் அடிக்கடி தன் பிரசங்கத்தில் விக்கிள்ஸ்வொர்த் கோடிட்டு கூறினார்:*

**"என்னுடைய ஊழியர்கள் கடன்பட நான் விரும்பவில்லை. ஆகிலும் கடன்பட்ட ஒரு**

மனுஷனின் நிலை அவர்களுக்கு வர வேண்டும் என்பதை என் மனதார விரும்பினேன். ஏனெனில் அதுபோன்ற நிலையில்தான், என்னுடைய ஊழியர்கள் தங்கள் முழங்காலை தங்கள் ஆண்டவருக்கு முன்பாக முடக்கி ஜெபித்திடும் பாக்கியம் கிட்டும், என்பதை நான் முழுமையாய் விசுவாசிக்கிறேன்" என அவர் கூறியதை விக்கிள்ஸ்வொர்த், தன்னுடைய விசுவாசத்திற்கும் அடிகோலியாய் கொண்டார்.

ஒரு நாள், விக்கிள்ஸ்வொர்த் தன்னுடைய பிளம்பிங் ஊழியர் களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது அவர் ஆண்டவரிடம் "ஆண்டவரே, நான் எங்கும் வெளியில் சென்று பணம் வாங்க இயலாது! பணம் வாங்கவும் மாட்டேன்! இந்த இக்கட்டு நேரத்தில் எனக்கு உதவும்!" என ஜெபித்தார். அதற்கு ஆண்டவர், அடுத்த தெருவில் உள்ள பிஷப் வீட்டிற்குச் செல் என கூறினார். விக்கிள்ஸ்வொர்த் சற்றே அதிர்ச்சி அடைந்தார்! ஏனெனில், சில கடன்காரர்கள் தங்கள் பணத்தை பிஷப்பிடமிருந்து வசூலிக்க கோர்ட் கேஸ் நடப்பது அவருக்குத் தெரியும். இதை மனதில் வைத்து, அவர் ஆண்டவரைப் பார்த்து "நான் இவரிடம் எப்படி செல்வது?" என மீண்டும் கேட்டார். மீண்டும் ஆண்டவர் "பிஷப் வீட்டிற்குச் செல்" எனக்கூறிவிட்டு சும்மா இருந்துவிட்டார்.

இப்போது முழு விசுவாச தைரியத்துடன் விக்கிள்ஸ்வொர்த் எழுந்து நின்றார். "இது என் விசுவாசத்திற்கு ஏற்பட்ட சோதனை! இது என் ஆண்டவருடைய பார்வையில் பொன் வெள்ளியை விட விலையேறப்பெற்றது!" (1பேதுரு.1:7) என அறிக்கையிட்டார்!

தன் வீட்டிலிருந்த சைக்கிளை கீழே எடுத்து வைத்து, பிஷப் மாளிகைக்கு ஓட்டிச் சென்றார். அங்கே சென்ற உடன், வாசலில் நின்ற பணிப்பெண், "பிஷப் வெளியூர் சென்றுள்ளார். திரும்பி வர 3 வாரங்கள் ஆகும்" எனக்கூறிய பணிப்பெண்ணிடம் "சகோதரி நீ சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது, என் ஆண்டவர்தான் இங்கே வரும்படி நடத்தினார்" என ஆணித்தரமாய் கூறியதைக் கேட்ட பணிப்பெண் "ஐயா, சற்றே பொறுங்கள் வருகிறேன்" எனக்கூறி வீட்டிற்குள் ஓடினாள். வீட்டிலிருந்து திரும்பி வந்த பணிப்பெண் கொண்டு வந்த கவரில் எனக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு பணம் சரியாக அதில் வைக்கப்பட்டிருந்தது. ஆச்சரியமடைந்த விக்கிள்ஸ்வொர்த் "நீ இப்படி அடிக்கடி செய்வது வழக்கமா?" எனக் கேட்டார்.

'இல்லை' என பதில் கூறிய பணிப்பெண் கீழ்கண்டவாறு கூறினாள்: "நேற்று இரவு 9 மணிக்கு பிஷப் ஐயாவின் மனைவி என்னுடைய சம்பளத்தையும், சம்பள பாக்கிகளையும் தந்தார்கள்.

அந்த சம்பளத்தில் ஒரு கணிசமான பகுதியை எடுத்து, **அவளை சீக்கிரமாய் சந்திக்க வரும் ஒருவரிடம் கொடுக்கும்படி** என் இரட்சகர் என் உள்ளத்தில் ஏவி இருந்தார். என்னிடத்தில் வந்த முதல் நபர் நீங்கள்தான்! இதை நான் உங்களிடத்தில் கொடுக்கவில்லையென்றால் என் உள்ளத்தில் சமாதான குறைவு ஏற்படும். தயவாய் பெற்றுக் கொள்ளுங்கள்'' என கூறியதைக் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து போன விக்கிள்ஸ்வொர்த் ''என் பெயர் உனக்குத் தெரியுமா? நான் என்ன செய்கிறேன் என உனக்குத் தெரியுமா?'' என ஆச்சரியமுடன் கேட்டார்.

அதற்கு அவள் ''ஐயா, எனக்கு எதுவும் தெரியாது! ஆனால், இந்தப் பணத்தை நீங்கள் வாங்காமல் போவதை நான் அனுமதிக்க மாட்டேன், என்பது மாத்திரம் எனக்குத் தெரியும்! நான் ஆண்டவரின் பிள்ளை, ஏற்றுக்கொள்ளுங்கள்'' என அன்பான வற்புறுத்தலோடு கூறினாள்.

நான் அவளிடம் ''அது சரி, இதை, ஆண்டவர் கொடுக்க சொல்லியது எந்த மணி நேரம்?'' என கேட்டபோது..... என்னிடம் ஆண்டவர் ''பிஷப் வீட்டிற்கு போ'' என கூறிய அதே நேரத்தில் அந்த உண்மையான பணிப்பெண்ணிடமும் பேசி இருக்கிறார் என்பதை அறிந்து, என் கண்களில் நன்றியின் கண்ணீர் வழிந்தோட நான் வீட்டிற்கு சைக்கிளில் திரும்பினேன்!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## விசுவாச புருஷர்கள் எங்கே?

''**வி**சுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய இம்மூன்றில் அன்பே பெரியது'' என 1கொரிந்தியர்.13- ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். ஆகிலும் **விசுவாசமில்லாமல் 'அன்பில்லை'** என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்! 'மாசுபடியாத விசுவாசத்தை' இன்று எத்தனை பேர் பெற்றிருக்கிறார்கள்? இந்த தூய விசுவாசத்தை பல்வேறு விளக்கங்கள் கூறி இன்றைய கிறிஸ்தவ உலகம் மாசுபடிய வைத்து விட்டது.

எங்கு பார்த்தாலும் விசுவாச அடிப்படையில் ஊழிய அவல குரல் தொனிப்பதை பார்க்கிறோம். ''இந்த T.V நிகழ்ச்சிகள் கர்த்தரே ஏற்படுத்தி தந்துள்ளார். இதுபோன்று பத்து சேனல் துவக்கி இருக்கிறோம். எல்லா தேவைகளையும் கர்த்தரே கொடுப்பார். இந்த அறிக்கையை வாசிக்கும் நீங்கள் உடனடியாக எங்களை ஆதரித்து கடிதங்கள் எழுதி தாங்குங்கள்'' என மக்களிடம் விண்ணப்பித்து **விசுவாச சேதத்தை** ஏற்படுத்துகிறார்கள்.

தங்கள் விசுவாசத்தோடு சில மனுஷீகமான தூண்டுதலையும் சேர்த்தளித்து.... விசுவாசத்திற்கு கறையை ஏற்படுத்துகிறார்கள். மெய்யான விசுவாசமோ தேவனோடு மாத்திரமே அந்தரங்கத்தில் நிலைத்திருக்க வேண்டும்! கொஞ்சம் கூட தெய்வ பயம் இல்லாமல், இதுபோன்றவர்கள் 'எங்களுடைய தேவைக்கு அனுப்புங்கள்!' என தயவாய் மக்களை கெஞ்சி கேட்டுவிட்டு.... தேவனுடைய வசனத்தை முன் வைத்து துணிகரமாய் பொய்யுரை பேசி "என் தேவன் உங்கள் குறைவை எல்லாம் (அது எத்தனை கோடி ரூபாயாக இருந்தாலும்) நிறைவாக்குவார்!" என மாய- ஜாலமாய் மக்களிடம் பேசுகிறார்கள்.

இவர்களுக்கே விசுவாசம் என்னும் 'அரிச்சுவடு கூட அறியாமல்' மக்களை ஏமாற்றுவதை, ஏமாற்றப்படும் மக்களும் 'அதேபோன்ற' அறியாமையில்தான் இருக்கிறார்கள்!

எபிரெயர்.11- ம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்ட விசுவாச வீரர்களில்.... இன்று எண்ணற்ற உத்தம சாட்சிகள் இருப்பதையும் சேர்த்திட முடியுமே! சீன நாட்டு மிஷனெரி ஹட்சன் டெய்லர்! ஜார்ஜ் முல்லர்! C.T.ஸ்டட்!..... போன்ற மாந்தர்கள் விசுவாச பட்டியலில் இடம் பெற்றார்கள் என்பதை நாம் அறிய வேண்டுமல்லவா? பின் ஏன், ஜனங்கள் 'விசுவாச போலிகளை' அதிசயித்து காண்கிறார்கள்?

கொல்கொதா மலை துன்பத்தின் சாகரத்தில், விசுவாசத்தின் சிகரமாகிய 'உயிர்த்தெழுதலை' நமக்கு காண்பித்த ஐசுவரிய நாதரை நம் கண்கள் கண்டிருந்தும்.... நாம் ஏன் விசுவாசத்தில் தரித்திரர்களாய் இருக்கிறோம்?

ஒருவனிடமுள்ள ஞானத்தையோ அல்லது அவனது ஆஜானுபாகுவான தோற்றத்தையோ தேவன் போற்றுவதில்லையே! **அவனிடம் விசுவாசமுண்டோ? அதை மாத்திரமே போற்றி மகிழ தேவன் விரும்புகிறார்.** ஏனென்றால் விசுவாசம் ஒன்றே தேவனை கனம் செய்கிறது! தேவனோ விசுவாசத்தை கனம் செய்கிறார்!

விசுவாசம் எங்குண்டோ அங்கெல்லாம் தேவனும் வாசம் செய்கிறார். தன்னால் முடியாத, பெலனற்ற வெறுமை கொண்ட ஜீவியமாய் இருந்தாலும், அந்த சகோதரனிடம் .... விசுவாசம் என்ற நற்பொருள் இருக்குமென்றால்.... அங்கு தேவன், தனது சர்வ வல்லமையையும் கொண்டு வந்து இணைத்து விடுவார்! அந்த விசுவாச வலிமையான புருஷர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்களில் நீங்களும் ஒருவராய் மாறுவதன்றோ தேவனுடைய விருப்பம்!

– லியோனார்டு ரேவன்ஹில்

## 'தேவனுக்கு முன்பாக வாழும் சபையே' நிலை நிற்கும்!

*அப்போஸ்தல நடபடிப் புஸ்தகத்தில் 'மூவாயிரம் பேர்' என்று தொகை வருகிறது மெய்தான். ஆனால் அது ரட்சிக்கப்பட்டவர்களின் தொகையேயல்லாமல் 'பெயர் கிறிஸ்தவர்கள்' அல்ல! (அப்.2:41,47).*

*இன்றோ, பெரும்பாலான சபைகளில் ஞான ஜீவன் இல்லை! வல்லமை இல்லை! அன்பில்லை! சகோதர ஐக்கியமில்லை! ஆத்தும வாஞ்சை இல்லை! பற்பல பாவங்களாலும், கவலைகளாலும், மேற்கொள்ளப்பட்டு உலகத்தாரர்கள் போலவே தவிப்பவர்கள் அநேகர்! ஏனோ, தானோவென்ற நிர் விசாரிகளும், ஏராளம், இன்று ஏராளம்!! இதற்கெல்லாம் ஆதாரமான காரணம்.... இவர்களில் பெரும்பாலோர் 'மனந்திரும்பி' இரட்சிக்கப்படவில்லை! என்பதேயாகும். நம் ஆண்டவர் எதற்காகப் பாடுபட்டு மரித்தாரோ அந்த நோக்கம் சபைகளில் நிறைவேறாவிட்டால் இப்படிப்பட்ட சபைகளால் ஆண்டவருக்கு அவமானமே தவிர, மகிமையில்லை. இதற்குப் பரிகாரம் தேடாமல், சபையும் அதன் ஊழியங்களும் என்னத்திற்கு?*

**நமது ஜீவியத்தை மாற்றி, நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்படிக்கே ஆண்டவர் தமது ஜீவனைக் கொடுத்தார். பாவங்களால் உண்டான கேடுகளுக்கு நாம் தப்பி, திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக வேண்டுமென்பதே ஆண்டவரும் அவரடியார்களும் போதித்த முக்கிய போதனை (2பேதுரு.1:4). இவ்வாறு நமது ஜீவியம் மாற்றப்படாததினாலேதான் சகலவித குழப்பங் களையும் போராட்டங்களையும் சபைகளில் காண்கிறோம்!**

*இதோ, ஆண்டவருடைய அடியார் நம்மிடம் வருகிறார்கள், அவர்களை அன்புடன் ஏற்றுக்கொண்டு, அவர்கள் ஆலோசனையை மதிப்புடன் கேட்போம் என்று சபையார் அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டியதே நியாயம்! தற்காலமோ, அப்படியல்ல. சபைகளுக்கு வருகிறவர்கள் துக்கத்தோடே திரும்பிப்போக வேண்டியதாயிருக்கிறது. நமது சபைகளையும் சபையின் காரியங் களையும் ஆண்டவருடைய ஆலோசனைக்கும் நடத்துதலுக்கும் ஒப்புக்கொடாமல் 'தான்தோன்றித்தனமாய்' தன் சொந்த ஞானத்தில் நடத்த முன்நிற்கும் ஒரு சபை ஊழியரால் பிரயோஜனம் ஏதும் இல்லை. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பிரதானமாகத் தேடாமல், "நற்பெயர் பெற்று" பிரயோஜனம் இல்லை என ஆண்டவர் வெளி.3:1 - ல் சர்தை சபைக்கு கூறியதே இன்றைய அநேக சபையின் நிலையாய்*

*இருக்கிறது! இன்று சபை "விழித்துக்கொள்வதும்" தங்களை தேவனுக்கு முன்பாக நிலைநிறுத்தி வாழ்ந்தால் மாத்திரமே, கறைபடாத 'வெண்வஸ்திரம்' உடுத்திய சபையாய் மிளிர்ந்திட முடியும்! மற்றபடி அல்ல (வெளி.3:2,5).*

*– பரமானந்தம் ஐயர்*

---

## சாது சுந்தர்சிங் 'வாழ்ந்த சிலுவையே' எழுப்புதல்!

*இமாச்சல பிரதேசத்தில் "கொட்கார்" என்ற ஸ்தலத்தில் திடீரென்று மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்பட்டது! 'நம் சாது வந்து விட்டார்.... நம் சாது வந்து விட்டார்!' என்ற ஆரவாரம் காட்டுத் தீ போல் கொட்கார் ஸ்தலம் முழுவதும் பரவியது. இந்த செய்தி கேள்விப்பட்ட ஒரு கும்பல் ஆனந்த கூத்தாடி கண்ணீர் வடித்தார்கள். சாது தங்கி இருந்த குகையை நோக்கி ஓடியவர்களில், கால் நொண்டி நொண்டி நடந்து சென்ற பெண் பிள்ளைகளும், பரட்டை தலையோடு மகிழ்ச்சியுடன் ஓடிய பையன்களும், கூட்டமாய் சென்ற குஷ்ட ரோகிகளும் அடங்குவர்! தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களும் ஆனந்தமாய் அவரைத் தேடி ஓடினார்கள். "**எங்களுக்காக அல்லவோ சாது திரும்பி விட்டார்**" என்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு, ஏதோ நித்திய கன்மலையை கண்டதுபோல் ஓடினார்கள்!*

*விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் சாது சுந்தர்சிங் அவர்களை சந்தித்த காலத்தில், அங்கிருந்த அனைவருமே மனம் திரும்பி இரட்சகரின் ஒளியை கண்டடைந்தார்கள். அவர் சந்தித்த சிறு பிள்ளைகள் எத்தனை பேரோ அத்தனை பேர்களுடைய இருதயத்திலும் **இயேசுவின் ஜீவனை** சாதுசுந்தர்சிங் விதைத்தார். அந்நாட்களில், சாது அவர்களுக்கு C.F.ஆண்ட்ரூஸ் என்ற நெருங்கிய நண்பர் இருந்தார். அவர் சாது சுந்தர்சிங்கை பற்றி கூறும்போது: "சுந்தர்சிங் இமாச்சல் பட்டணத்தில் இருக்கும்போது, தன்னுடைய உபரி நேரத்தை பள்ளி வாலிப பையன்களோடு அதிகமாய் செலவழித்தார். இரவில் நீண்ட நேரமாய் இந்த வாலிப பையன்கள் கொட்காரில் அவர் தங்கி இருந்த குகைக்கு முன்பாக அமர்ந்து, சாது சுந்தர்சிங்கின் பிரகாசிக்கும் முகத்தை கண் இமைக்காமல் உற்று நோக்கி, அவர் கூறுவதை பேரார்வத்துடன் கேட்பார்கள். அவருக்குள் இருந்த விசுவாச தைரியமும், துணிச்சலும் இந்த இளைஞர்களின் உள்ளத்தை கொள்ளைக் கொண்டது!" எனக் கூறினார்.*

*இந்த மாணவ இளைஞர்களிடம் ஏற்பட்ட மாறுதல் மிக ஆச்சரியமானது. ஒரு சமயம் இந்திய புகழுக்கு விளையாட்டு வீரனாய்*

திகழ்ந்த ஒரு மாணவன் IAS இந்திய அரசாங்க பணி தனக்கு கிடைத்தபோதும், அதை உதறிவிட்டு, கிறிஸ்துவுக்கு தொண்டாற்ற முன் வந்தார். மிகப் பெரும் திறமை கொண்ட மற்றொரு மாணவன், சபையின் ஊழியத்திற்கு தன் ஜீவனை தியாக பலியாக ஒப்படைத்து, கிறிஸ்துவின் மீதுகொண்ட தனது அன்பை வெளிப்படுத்தினார்!

இமாச்சல் பிரதேசத்தில் 'தீண்டாமை' தலை விரித்து ஆடிய கொடிய காலம்! ஒரு உயர்நிலை பள்ளியில் தீண்டத்தகாத, துப்புரவு பணியாற்றிய ஒரு தோட்டி, கொடிய விஷக் காய்ச்சலால் தன் சேரியில் மரண தருவாயில் அவஸ்தைப்பட்டார். சாது அவர்களின் அன்பின் **சீஷனாய் விளங்கிய** ஒரு மாணவ இளைஞன், உயர் வகுப்பை சேர்ந்த அவன், தீண்டத்தகாத தோட்டியின் குடியிருப்புக்குச் சென்று, சுகவீனமாய் கிடந்த பள்ளியின் தோட்டிக்கு அனைத்து உதவிகளையும் ...... அந்த சேரியில் தங்கி, நல்ல சுகத்துடன் அந்த தோட்டி பள்ளிக்கு திரும்பி வரச் செய்தான். இதுபோன்ற செயல் இமாச்சல உயர்குல மக்களிடையில் அந்நாட்களில் சம்பவித்தது, ஒரு மாபெரும் அற்புதம் என்றே சொல்ல வேண்டும்.

இமாலய மலையில், கொடிய வயிற்று வலியில் சுருண்டு சாக கிடந்த ஒரு மனுஷனை, சாதுவோடு அமர்ந்து உபதேசம் கேட்ட ஒரு பையன், அவரைத் தன் முதுகில் போட்டுக்கொண்டு சுமார் 2 மைல் அந்த மலையின் கரடுமுரடான பாதையில் நடந்துவந்து, அவர் உயிரை காப்பாற்றினான். தொற்று நோயில், அழுகி இருந்த அந்த மனிதனை உயர்குல வாலிபன் தூக்கிவந்த செயலுக்கு 'ஒரே காரணம்' சாது அவர்களோடு சேர்ந்து பெற்றுக்கொண்ட **இயேசுவின் தியாக ஆவியே** ஆகும். அவன் தூக்கி வந்த செயலைவிட, **அவனிடமிருந்து ஒளி வீசிய அன்பின் சுடரே** அன்று எல்லோர் மனதையும் பரவசப்படுத்தியது!

சாதுவை சூழ்ந்திருந்த மக்களின் 'குறிப்பாய்' வாலிபர்களின் உள்ளத்தை மாற்றிய மகிமை சொல்லி முடியாதது!

ஒரு மனுஷீகமான ஆறுதல், ஒரு மனுஷீகமான தியாகம், ஒரு மனுஷீகமான அன்பு.... ஆகிய யாதொன்றும் ஒரு மனிதனை இந்த அளவிற்கு மாற்ற இயலாது. அதுபோன்ற அரை - குறை தியாக புருஷர்களைக் கண்ட இந்த வாலிபர்களின் உள்ளங்கள் ஆழமாய் கவரப்பட்டதில்லை! ஆனால் சாது சுந்தர் சிங்கின் வாழ்க்கையோ முற்றிலும் அனல் கொண்ட தியாகச் சுடராய் இருந்தது. அவர் தனக்காக வாழ்ந்தார் எனச் சொல்வதற்கு, துருவி துருவி பார்த்தாலும், யாதொரு தடயமும் யாதொருவராலும் காண முடியவில்லை.

அவர் மனப்பூர்வமாய் உவந்தளித்த செல்லும் செலவு, இயேசு

கிறிஸ்துவின் தியாகத்தோடு மாத்திரமே ஒப்பிட முடியும். அவர் ஜீவித்த காலம் வரை ஜனங்களிடத்தில் 'சிலுவையை' வானலாவ புகழ்ந்து பிரசங்கித்தார். இருப்பினும் அதுவல்ல அவரது வாழ்வின் இரகசியம்! அதைவிட மேலாய் **"அவர் சிலுவையை தழுவி வாழ்ந்தார்!"** என்பதே அவரைக் குறித்த இரகசியமாய் இருக்கிறது! இவ்வழி செல்லும் வாலிப உள்ளங்கள், இன்று நம்மிடத்தில் உண்டோ? இதுவே உங்களை சந்திக்கும் மிகப்பெரிய கேள்விக்குறி.... பதில் உங்களுடையதாய் இருக்கட்டும்! ஆமென்.

– சாது சுந்தர்சிங்

---

## எந்த சூழ்நிலையிலும், முன்னேறுபவனே உத்தம கிறிஸ்தவன்!

**பெ**ருமையின் எண்ணம் கிறிஸ்தியானுக்கு வந்த உடன் வளர்ச்சியில் குன்றி ஆவிக்குரிய தூக்கத்திற்குள் சென்றுவிட்டான். இந்த நிலையில், அவன் பெருமைக்கு காரணமான 'அனுமதி சுருள்' அவன் கையிலிருந்து நழுவி, அவன் உட்கார்ந்திருந்த ஆசனத்திற்கு பின்னே கீழே விழுந்து விட்டது. ஆகிலும், தன்னிடமிருந்து அந்த 'இரட்சிப்பின் சுருள்' கீழே விழுந்ததை அறியாதவனைப் போல் இருந்தான். ஒன்றை இழப்பதும், அவ்வாறு இழந்ததை அறியாது இருப்பதும், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு அபாயம் நிறைந்த நிலை என்பதை அறியுங்கள்!

ஆகிலும், கிறிஸ்தியான் திடீரென்று விழித்துக் கொண்டான். மீண்டும் தன்னை துரிதப்படுத்திக்கொண்டு, அந்த குன்றின் மேல் நடந்து சென்றான். அச்சமயத்தில், தாங்கள் சென்ற பாதையிலிருந்து திரும்பி ஓடிவந்த இரண்டு நபர்களைக் கண்டான். ஒருவனுடைய பெயர், **பயந்தவன்!** மற்றொருவனுடைய பெயர், **சந்தேகிப்பவன்!** அவர்கள் திரும்பி ஓடி வந்த போது "வழியில் சிங்கம்...சிங்கம்" என அலறினார்கள். இதைக் கேட்ட கிறிஸ்தியானும் கிலேசம் அடைந்தான். இந்த சூழ்நிலையில், தான் வைத்திருந்த அனுமதி சுருளில் ஏதேனும் வழியோ அல்லது ஆறுதலோ இருக்கிறதா? எனக் கண்டறிய முயன்ற போது, அவன் பெற்றிருந்த சுருள் காணாமல் போனதைக் கண்டான்!

> கிறிஸ்தவ ஜீவியத்தில், எப்போதெல்லாம் பயம் வருகிறதோ, அப்போதெல்லாம் தேவனுடைய வசனத்தில், ஆறுதலான வாக்குதத்தங்கள் உண்டு. பயந்திருக்கும் நம்மிடம் "நீ பயப்படாதே, நான் உன்னைச் சுற்றிலும் அக்கினி மதிலாய் நின்று காப்பேன்!" என்றெல்லாம் கூறி நம்மைத் தேற்றுவார்!

ஆனால், தன்னிடம் தரப்பட்ட சுருள் காணாமல் போனதை உணர்ந்து, கிறிஸ்தியான் திரும்பவும் பின்பாக ஓடிச்சென்று அவன்

அமர்ந்திருந்த ஆசனத்திற்கு கீழ் கிடந்த சுருளைக் கண்டுபிடித்தான். நம் யாவருடைய ஜீவியத்திலும் "**இரட்சிப்பின் நிச்சயமாகிய இந்த சுருள்**" நம்மோடு எப்போதும் இருக்க வேண்டும். யாரெல்லாம் இந்த இரட்சிப்பின் நிச்சயத்தை இழக்கிறார்களோ, அதுபோன்ற ஜனங்களே பயந்து, திரும்பி ஓடி வந்து, பின்மாறுவார்கள். ஆனால் யோவான். 6:37 கூறுகின்ற ஆச்சரியமான வசனமாகிய "என்னிடத்தில் வருகிற ஒருவனையும், நான் புறம்பே தள்ளுவதில்லை" என்பதை மறவாமல் நாம் ஆண்டவரிடமே திரும்பிச் செல்ல வேண்டும். இதுபோன்ற ஆறுதலான இயேசுவின் வார்த்தைகள், நமக்கு மீண்டும் 'இரட்சிப்பின் நிச்சயத்தை' நம் இருதயத்திற்கு தந்துவிடும். இப்போது, தன்னுடைய தவறுக்கு வருந்திய கிறிஸ்தியான், இரட்சிப்பின் நிச்சயத்தையும் அது வழங்கும் சந்தோஷத்தையும் திரும்பப் பெற்றான்!

உற்சாகமடைந்த கிறிஸ்தியான், தன் பயணத்தை தொடர்ந்தபோது காரிருள் நேரமாய் இருந்தது. ஆகிலும், திடமனதோடு முன்னேறியபோது, ஓர் ஆச்சரியமான மாளிகையை கண்ணுற்றான்! அந்த மாளிகையின் பெயர் **'வசீகரம்'** என்பதாகும். இந்த இருள் நேரத்தில், எப்படியாகிலும் அந்த மாளிகைக்கு சென்றுவிட விரும்பினான். அச்சமயத்தில் வழி அருகே அந்த இரண்டு சிங்கங்களை சந்தித்தான். அந்த சிங்கங்கள், அந்த மாளிகையின் அருகாமையில் இருந்தபடியால் திடுக்கிட்டான்.

அச்சமயத்தில் அந்த அரண்மனைக் காவலாளி "நீ ஒன்றுக்கும் பயப்படாதே! அது பிசாசுதான், ஆகிலும் அவைகள் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதைப் பார்!" என சத்தமிட்டான். அந்த இடுக்கமான பாதையின் விளிம்பின் ஓரம் வரை மாத்திரமே இந்த சிங்கங்கள் வர முடிந்தது அல்லாமல், இடுக்கமான பாதைக்குள் அவைகள் வரமுடியாதபடி சங்கிலியால் கட்டப் பட்டிருந்தன. ஒருவன் இடுக்கமான பாதையின் வழியாய் வராமல், விலகி.... விசால வழிக்குள் சென்றால் இந்த சிங்கங்கள் அதுபோன்ற வர்களை நிச்சயமாய் பீறிப்போடும்! இந்த சிங்கங்கள் எவ்வளவு கர்ஜனை செய்தாலும், நம்மைத் தீண்ட முடியாது என்பதை நாம் உறுதியாய் அறிந்திருக்க வேண்டும்!

ஆகவே, சிங்கம் போன்ற கடினமான சூழ்நிலை வரும் போதெல்லாம் ஏசாயா 35 - ம் அதிகாரத்தில் வாசிப்பது போல் "உன்னத பாதையில் நடந்து வருவோரை, சிங்கங்கள் மேற்கொள்வதில்லை" என்ற வசனத்தையே நாமும் நினைவு கூர்ந்திட வேண்டும்!

– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)

## ‘சத்தியம் பேசாத அன்பு’ கல்வாரி அன்பு அல்ல!

என்னுடைய ஆசிரம அனுபவத்தில், மனுஷீகமான ‘மாய அன்பு’ என்னைப் பிடித்துக் கொள்ள சுற்றிச் சுற்றி வந்ததைக் கண்டேன். ஆசிரமத்து சகோதரிகளில் சிலர் ஒருவருக்கொருவர் தீமை செய்து என்னிடம் அடிக்கடி வருவதுண்டு. அச்சமயத்தில், ஒருவர் மற்றொருவரின் தீமைக்காய், **சிலுவையை சகித்திட மறுப்பதை** கண்ணாரக் கண்டேன். மற்றொரு சமயத்தில் காற்புணர்ச்சியும், பெருமையும் நிறைந்தவர்களாய், அதிலிருந்து **மனந்திரும்ப விரும்பாத** சகோதரிகளையும் கண்டேன். சில சமயங்களில், திறமையாய் பணியாற்றும் சில ஆசிரமத்து சகோதரிகள், மற்ற சிலரை ஆதிக்கம் செய்திட துடித்து வருவதையும் கண்டேன்!

இவர்களை தனித்தனியாய் அழைத்து ஒருவரிடம் ‘மற்றவர் தீமையை சகித்து நீ ஏன் சிலுவையில் மரித்திட கூடாது’ எனக் கூறியதும், அந்த சகோதரி ஆத்திரமடைந்தாள். அதுபோலவே காற்புணர்ச்சியும் பெருமையும் கொண்ட சகோதரியிடம் “தாழ்மை இல்லாமல் ஊழியம் இல்லையே!” எனக்கூறியதும்.... என்னை ‘பெருமைக்காரி’ என கூறுகிறீர்களா? என வெகுண்டாள். மற்றொரு சகோதரியிடம் “**நீ திறமையாக பணியாற்றினாலும் உன் திறமை யினிமித்தம் சிலரை ஆதிக்கம் செய்ய பார்ப்பது தவறு**” எனக் கூறியதும் ‘அப்படியானால் என்னுடைய பொறுப்பை வேறு யாராவது செய்யட்டும்’ என ஆத்திரம் அடைந்தாள். நானோ அவர்களைக் கண்டிக்கத் தயங்கி குழம்பி விட்டேன். இவர்கள் எல்லோரையும் திருப்திப்படுத்த எனக்கு இருந்த ஒரே ஆயுதம் “சரி சரி.... ஒருவருக்கொருவர் சமாதானமாய் வாழுங்கள். அன்பையும் ஐக்கியத்தையும் விட்டுவிடாதிருங்கள்” என நான் பொதுவாய் கூறியதை ஆண்டவர் என்னை கண்டித்தார். “உன் அன்பு மாயமற்றதாய் இருப்பதாக!” என்ற ரோமர்.12:19 - ம் வசனத்தை நினைப்பூட்டினார். உன்னுடைய பொறுப்பை, இலகுவாக்கிக் கொண்டு, பிறரின் காயங்களை மேற்பூச்சாய் குணமாக்கும்படி ‘..... சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் சமாதானம்’ என்று சொல்லிட (எரேமியா.6:14) நீ திருப்தி கொண்டபடியால் சத்தியத்தின் கூர்மையை மழுங்கச் செய்துவிட்டாய். ‘சத்தியம்’ சிலரை பாதிக்கும் என தெரிந்திருந்தும்... அந்த பாதிப்பை மேற்பூச்சாய் மூடிவிட ‘இலகுவானவைகளை பேசும்’ உன்னிடம் “கல்வாரி தெய்வ அன்பு இல்லை” என ஆண்டவர் கூறியதும், கண்ணீருடன் மனந்திரும்பி உறுதிபூண்டேன்!

– ஏமி கார்மைக்கேல்

## ‘உலகத்தை ஜெயித்திடும்’ விசுவாசம்!

***நா**ம் காண்பவைகளைக் கொண்டு வைத்திருக்கும் விசுவாசம், ‘கண்டு.... தொட்டு’ அறிந்திடும் ஓர் விக்ரக விசுவாசமேயாகும்! பணம், ஆஸ்தி, அந்தஸ்து, பட்டம், பதவி, சுகம் ஆகியவைகளை, கண்டு, தொட்டு விசுவாசிப்பது மண்ணுக்குரிய விசுவாசமே யல்லாமல்,* **தெய்வீக விசுவாசம்** *அல்ல! தன் கண்களால் கண்டு, தொட்டு அறிந்த இவைகள் யாவும் மங்கி மறையும்போது ‘அந்த’ விசுவாசமும் மங்கிவிடும்! ஏனெனில் “காண்பது யாவும் அநித்தியம்” என்றே 2கொரிந்தியர்.4:18 கூறுகிறது. தெய்வ விசுவாசமோ, இக்கட்டு நேரங்களில் “காணாத, இனி வர காத்திருக்கும் தேவனையும், அவரது உதவிகளையும்” நம்புகிறவர்களாகவும் ..... அந்த காணப்படாத வைகளுக்கு நிச்சயமான சாட்சி (EVIDENCE) கொடுப்பவர்களாகவும் நாம் இருந்திட வேண்டும், என எபிரெயர்.11:1 கூறுகிறது.*

*இந்த விசுவாசத்தைக் கொண்டே, ஆதியில் தேவன் “காணப்படாத ஒன்றுமில்லாமையிலிருந்து!” இன்று நம் கண்களுக்கு தோன்றுபவைகளை சிருஷ்டித்தார்! இருளில், ஒளி உண்டாக்கினார், அழகுள்ள வான மண்டலங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி.1:2,4; எபி.11:3).*

**இன்றும், அவரையே விசுவாசித்து வாழும் அவரது தாசர்களுக்கு “அவர் சிருஷ்டித்து தரும் உதவியே” அவர்கள் நம்பி வாழும் பேருதவியாய் இருக்கிறது! ஆகவேதான், பணம் இல்லாவிட்டாலும், பெரும் இழப்போ அல்லது நஷ்டமோ ஆகிய எது நேர்ந்தாலும், ..... தெய்வ விசுவாசம் கொண்டவர்கள் மனம் சோர்வதில்லை, இருதயம் கலங்குவதில்லை! (யோ.14:1).**

*ஏனெனில், இவர்களே காணாத அவரது கரத்தின் உதவிக்கு, ‘சாட்சி கொடுக்கும்’ EVIDENCE - ஆக இருக்கிறார்கள்! (எபிரெயர்.11:1).*

*ஆகவே, காண்கின்ற அத்திமரம் துளிர் விடாவிட்டாலும்.... தங்களுக்கு தடையாய் மலை தோன்றினாலும், காட்டத்தி மர வேர் போல் ஆழமாய் பின்னியிருக்கும் பிரச்சனை சம்பவித்தாலும்... கர்த்தர் மீது கொண்ட உறுதியான விசுவாசத்தில் சாட்சியாய் EVIDENCE ஆக நிலைத்திருப்பார்கள்! ஆம், காண்கின்ற பணமோ, கண்கள் தேடும் மானிட தயவோ அல்ல.... இந்த விசுவாசமே, அவர்களின் தோட்டத்தை மலரச் செய்யும்! மலையை பெயர்ந்துண்டு போகச் செய்யும்! காட்டத்தி மரத்தை வேரோடு அகன்றிடச் செய்யும்! ஆம், இந்த விசுவாசமே ‘உலகத்தை’ ஜெயித்திடச் செய்யும்!! (1யோ.5:4). அதாவது, இந்த உலகத்தில் தோன்றும் எந்த துன்பங்களையும், தடைகளையும் ஜெயிக்கின்ற ஜெயமாய்..... அவர்களின் விசுவாசம் ‘கடுகளவே’ இருந்தாலும், அது அவர்களுக்கு பலனைத் தரும்! ஆமென்.*

*– T.ரத்தினகுமார்*



## தத்துவ ஞானி 'பெல்வியஸ் ஜஸ்டின்' சத்தியத்திற்கு சிரச்சேதம் அடைந்தார்!

(AD 100–165)

பெல்வியஸ் ஜஸ்டின் சமாரியா ஊரில் பிறந்தவர். அன்று, கிணற்றண்டையில் கிறிஸ்து வழங்கிய ஜீவ தண்ணீரைப் பருகி, தாகம் தீர்த்து கொண்ட சமாரியா ஸ்திரீயைப் போலவே..... அந்த சமாரியாவில் பெல்வியஸ் ஜஸ்டினும் கிறிஸ்துவின் மீது தாகம் கொண்டு திருப்தி அடைந்தார். ஸ்டாய்க், பிளேட்டோ போன்ற தத்துவ ஞானிகளின் சீடர்களுக்கு கிறிஸ்துவின் மகிமையை வெளிக்காட்டிய முதல் கிறிஸ்தவ தத்துவ ஞானியாய் இவர் விளங்கினார்.

ரோம் நாட்டில் பிறந்த ஜஸ்டின், சத்தியத்தின் மீது கொண்ட பேரார்வத்தில் கிரேக்க மொழியிலும் லத்தின் மொழியிலும் பல்வேறு தத்துவ ஞானங்களை ஆராய்ந்தார். அது யாதொன்றும் அவருடைய இருதய தாகத்தை தீர்க்கவில்லை. ஸ்டாய்க் தத்துவம் தேவனை ஆராய்வதுபோல் செய்துவிட்டு "தேவன் மனிதனை குறித்து அக்கறை கொண்டிருக்கிறாரா? இல்லையா?" என்ற கேள்வியோடு நிறுத்திக் கொண்டது. அரிஸ்டாட்டில் தத்துவமோ, தங்கள் மாணாக்கர்களிடம் பணம் வசூலிப்பதில் அக்கறைக்கொண்டு திசை மாறினார்கள். பித்தகோரியன்ஸ் தத்துவமோ, இசை, கணிதம், புவியியல்..... போன்ற கண்டுபிடிப்புகளில் ஆர்வம் காட்டியது. 'கண்களுக்கு புலப்படாத ஒரு உலகம்' என்ற தத்துவத்தில் சாக்ரடீசும்,பிளேட்டோவும் ஆராய்ந்ததை ஜஸ்டின் ஓரளவு ஏற்றுக்கொண்டார்.

AD - 132 ம் வருடம் சரித்திரத்தில் பெயர் சொல்லப்படாத ஒரு வயோதிபர் கடல் கடந்து வந்து, ஞானி ஜஸ்டினிடம் பொறுமையாய் பேசி பிளேட்டோவின் தத்துவம் இறைவனின் எல்லையை தொடவில்லை என சுட்டிக்காட்டினார். ஆனால், இஸ்ரவேல் நாட்டின் பழைய தீர்க்கதரிசிகள் தேவனை அறிந்ததையும், கிறிஸ்துவின் வருகையை முன் குறித்ததையும் எடுத்து போதித்தார். அதை ஆர்வமுடன் கேட்ட ஜஸ்டின்..... அப்படியே விசுவாசித்தார். **தத்துவ விவாத மேடைகளில் 'கிறிஸ்தவமே' மெய்யான சத்தியம் என பிரகடனம் செய்தார்.** கடைசியாக அவர் சந்தித்த விவாத மேடையில் கிரேஸியன் தத்துவ ஞானி சைனிக்கை தத்துவ மேடை விவாதத்தில் தோற்கடித்தார். ஆத்திரமடைந்த சைனிக் ஜஸ்டினையும் அவரோடு சேர்ந்த ஆறு மாணாக்கர்களையும் ரோம தளபதி ரஸ்டிக்கசிடம் காட்டி கொடுத்தார். ரோம தேவதைகளுக்கு பலி செலுத்தும் பண்டிகை வந்தபோது ஜஸ்டினும் அவரது ஆறு சீஷர்களும் கைது செய்யப்பட்டு, வாரினால் தோல் உரிக்கப்பட்டு தலை சீவப்பட்டார்கள்!

இந்த பூமியில், இயேசு கிறிஸ்து தன் இரத்தத்தால் சம்பாதித்த நித்திய ஜீவனை அடைவது என்பது வேறு! இந்த பூமியின் அற்ப ஜீவியத்தை இழந்து தங்கள் விசுவாசத்தை நிரூபிப்பது என்பது வேறு. இதே விசுவாசத்தால் நாமும் ஆட்கொள்ளப்படுவோமாக!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'கழுகின்' முதுகில் 'காகம்' சவாரியா? வாலிபனே கவனம்!!

**சு**னோலி என்ற இடத்திற்கு உத்திரபிரதேச பேருந்து ஒன்றிலே சென்று கொண்டிருந்தோம். பேருந்தின் பயணிகள் காபி, டீ, சாப்பிட ஏதுவாக பேருந்தின் டிரைவர் பேருந்தை அந்த கிராமத்திற்கு அருகில் நிறுத்தியிருந்தார். ரஸ்தா ஓரத்தில் ஒரு பட்ட மரம் நின்று கொண்டிருந்தது. அந்த பட்ட மரத்திலே கழுகு ஒன்று வந்து உட்கார்ந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் நான்கு காகங்கள் எங்கிருந்தோ வந்து கழுகின் அருகில் அமர்ந்தன. கழுகு அந்த காகங்களுக்கு எந்த ஒரு தொந்தரவும் கொடுக்காத போதினும், பொல்லாத காகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அந்த கழுகை ஒரு கை பார்த்துவிட்டன. வேடிக்கை என்னவெனில் ஒவ்வொரு காகமும் கழுகின் மேல் வசதியாக அமர்ந்து கொண்டு அதை கொத்து கொத்து என்று கொத்தி தள்ளிவிட்டதுதான்! இப்படியொரு காட்சியை நான் என்றுமே கண்டதில்லை. அற்பமான காகங்களை தனது முதுகின் மேல் அமரவும் தன்னை கொத்தவும் வழி வகுத்துவிட்ட 'அந்த கழுகைக் குறித்து' நான் ஆழ்ந்து சிந்தித்தேன். ஏன் அந்த காகங்கள் கழுகின் மேல் சவாரி போட்டன?

மேகங்களுக்கு மேலாக பறப்பதே கழுகு பறக்க வேண்டிய இடம்! அப்படியிருக்க அது இருக்க வேண்டிய ஸ்தானத்தையும், இடத்தையும் விட்டுவிட்டு தாழ்வுக்கு பறந்து வந்தது. தாழ்வுக்கு இறங்கவே, தாழ்வையே தஞ்சமாக கொண்டு மண்ணுக்காக வாழும் காகங்கள் கழுகின் மேல் சவாரி போட்டுக்கொண்டன!

தேவனுடைய பரிசுத்த ஒளியில் வாழ வேண்டிய ஒரு வாலிபன், தனது ஸ்தானத்தை விட்டு விட்டு, மாலைமயங்கும் அஸ்தமன நேரத்திலும், இரவின் இருண்ட அந்தகாரத்திலும், பாவம் வாசம் செய்யும் 'சந்துக்கடுத்த தெருவிலும் போய்' வசமாக சிக்கிக்கொள்வதை நீதிமொழிகள் 7ம் அதிகாரத்தில் நாம் பார்க்கின்றோம் அல்லவா?

நிழலைப்போன்ற நமது பூவுலக வாழ்க்கை, முடிவில்லாத நித்திய பேரின்ப வாழ்வுடன் தொடர்புடையது என்பதை மறவாதீர்கள்! விரைந்து, நித்திய வாழ்விற்கு மனந்திரும்புங்கள்! அதன்பின்பு, அற்ப நிமிட மாம்ச சிற்றின்பங்களை அனுபவிப்பதற்காக, நமது பூலோக வாழ்வை பாழாக்கி...... அத்துடன், பரம வாழ்வையும் இழந்துவிடாதிருப்போமாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.